1972 ஆகஸ்ட் 19]

இணைப்பு I

[183-ம் பக்கத்திலுள்ள 97-ம் எண்ணுள்ள வினாவின் விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(இ) வேலைவாய்ப்பின்மை குறித்த வல்லுநர் குழு எனப்படும் உயர் அதிகாரக் குழு ஒன்றை இந்திய அரசு அமைத்துள்ளது. இக்குழு வேலைவாய்ப்பின்மை நிலையம், போதிய வேலைவாய்ப்பின்மை நிலையம் எந்த அளவுக்கு உள்ளது என மதிப்பிட்டு, அவற்றைத் தீர்த்து வைப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளைப்பற்றி எடுத்துரைக்கும்.

இக்குழு வினைப்பட்டியலைத் (வினைப்பட்டியல் I) தயாரித்து அதன் படிகளைப் பலருக்கும் அனுப்பியுள்ளது. இவ்வினைப்பட்டியல் அனுப்பப்பட்டுள்ளவர்களில் தனிப்பட்டவர்களும் மன்றங்களும் உள்ளனர். அம்மன்றங்களாவன: தொழிற் சங்கங்கள், தொழிலதிபர்கள் நிறுவனங்கள், வர்த்தகக் கழகங்கள், பல்கலைக் கழகங்கள் முதலியன. இக்குழு, மேற்சொன்ன I-வது வினைப்பட்டியலில் அடங்கியுள்ள பல்வேறு வினாக்களின்மீது மாவட்ட அதிகாரிகள் தங்கள் கருத்துக்களையும் கருத்துரைகளையும் குழுவுக்கு நேராக அனுப்பி வைக்க வேண்டுமென்று எல்லா மாவட்ட அதிகாரிகளுக்கும் உத்தரவிடுமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. ஏனெனில், மாவட்ட அதிகாரிகள் மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களுடனும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது தொடர்பான திட்டங்களுடனும் தொடர்பும் பிணைப்பும் கொண்டுள்ளனர். அதற்கிணங்க தொழிலாளர் நலத் துறை, அவ்வாறே செய்யுமாறு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கும் தெரிவித்துள்ளது.

இக்குழு, மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகள் ஆகியவற்றின் கருத்துக்களையும், கருத்துரைகளையும் பெரும்பொருட்டு, இன்னொரு வினைப்பட்டியலைத் (வினைப்பட்டியல் II) தயாரித்துள்ளது. வினைப்பட்டியல்கள் இரண்டுக்கும் உரிய மறுமொழிகளை ஒவ்வொரு துறையிலிருந்தும் அனுப்பிவைக்குமாறு குழு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. துறைகள் தமது மறுமொழிகளை நேரடியாகக் குழுவுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.